சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.60/2024**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | தொழில் | இல்லத்தரசி |
| கணவர் பெயர் | சிவதாஸ் | ஜாதி | |
| கிராமம் | முள்ளிப்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 55 |

**03.03.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 24.11.1984 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.01.1995 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் வாரிசு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வதி என்பவரின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.09.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி அறிவிப்பை பெறாமல் திரும்பியதற்கான அஞ்சல் உறை **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போளூர் ஐ.ஓ.பி. வங்கி மேலாளர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.